**விருப்பு வெளிப்படுத்துகை தொடர்பான அழைப்பு (EOI)**

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

**சுற்றாடல் அமைச்சு**

**பெறுகை அமைப்பின் பெயர்:**

இலங்கையில் மொன்ரியல் கூட்டிணைப்பின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் கருத்திட்டம், வாயு வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் பிரிவு

**மதியுறை சேவை:**

குளிரூட்டிகள் மற்றும் வளிப் பதனாக்கி அமைப்புகள் (RAC) மற்றும் நடமாடும் வளிப் பதனாக்கி அமைப்புகள் (MAC) சார்ந்ததாக செயற்படுகின்ற தொழில்நுட்ப நிபுணர்கள் / தொழிலாளர்களுக்கான நன்னெறி மிக்க ஒழுக்கக் கோவையை (Code of Good Practices) விருத்தி செய்தல்.

**ஒப்பந்த இலக்கம்** : ENV/ARM & NOU/04/15/25/2025

சுற்றாடல் அமைச்சின் வாயு வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் பிரிவினால் தகைமையும், அனுபவமும் உள்ள உள் நாட்டு ஆலோசகர்களிடமிருந்து மேலே குறிப்பிடப்பட்ட மதியுறையை மேற்கொள்ளும் முகமாக **விருப்பு வெளிப் படுத்துகை (EOI)** கோரப்படுகின்றது.

இதன் போது, சுற்றாடல் அமைச்சின் வாயு வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் பிரிவின் சார்பில் கருத்திட்ட மதியுரை பெறுகைக் குழுவினால் (CPCP), இவ் விளம்பரத்தில் விபரிக்கப்பட்டுள்ள சேவைகளை வழங்கும் பொருட்டு தகுதியும், அனுபவமும் பெற்றுள்ள ஆலோசகர்கள், இது தொடர்பாக தங்களது சேவைகளை வழங்குவதற்கு ஆர்வம் காட்டுவதை தெரிவிப்பதற்கு அழைக்கப்படுகின்றனர். ஆர்வமுள்ள ஆலோசகர்கள், மேற்கண்ட மதியுரை சார்ந்த பணிகளை முன்னெடுப்பதற்கு தாம் தகுதியும், அனுபவமும் பெற்றிருப்பதை நிரூபிக்கும் தகவல்களை முன் வைத்தல் வேண்டும்.

குளிரூட்டிகள் மற்றும் வளிப் பதனாக்கி அமைப்புகள் (RAC) மற்றும் நடமாடும் வளிப் பதனாக்கி அமைப்புகள் (MAC) ஆகிய துறைகளில் பணிபுரிகின்ற தொழில்நுட்ப நிபுணர்கள் / தொழிலாளர்களினது, குளிரூட்டல் பதார்த்த (Refrigerant) அலகுகள் மற்றும் கட்டமைப்புகளின் சேவை மற்றும் பராமரிப்புப் பணிகளை பாதுகாப்பாகவும், திறன் மிக்க வகையிலும் சுற்றுச் சூழலுக்கு ஏற்புடையதாக செயற்படுத்தும் திறன்களை மேம்படுத்தும் நோக்கில், இக் கட்டளையின் கீழான குறிக்கோள் வடிவமைக்கப்பட்டுள்ளது. மொன்ரியல் கூட்டிணைப்பின் (Montreal Protocol) கடப்பாடுகள், தேசிய மற்றும் சர்வதேச தர நிலைகள் மற்றும் பசுமை தொழில்நுட்ப தொழில் முறை கல்வி மற்றும் பயிற்சி (Green Technical Vocational Education and Training - TVET) கொள்கையுடன் முற்று முழுதாக ஒத்திசையக் கூடியதாக, விபரமான, நடைமுறை ரீதியாக ஒத்திசைவான மற்றும் விளக்கப் படங்களுடன் கூடிய வழிகாட்டல் ஆவணத்தை தயாரிப்பதே இக் கட்டளையின் முதன்மை நோக்கமாகக் காணப்படுகின்றது.

**பணிக்கோள் வரம்பு (Scope of Work)**

- நடப்பு நன்னெறி ஒழுங்குக் கோவைகள் (Codes of Good Practices), தொடர்புடைய தேசிய மற்றும் சர்வதேச தராதர நிலைகள் (SLS, ASHRAE, ISO, EN, IEC), பசுமை தொழில்நுட்ப தொழில் முறைக் கல்வி மற்றும் பயிற்சிக் (Green TVET) கொள்கை, தேசிய திறன் தராதர நிலைகள் (National Competency Standards), பாடத் திட்டங்கள் மற்றும் பயிற்சி கற்றல் பொருட்கள் ஆகியவற்றை விரிவாக மீளாய்வு செய்தல்.
- மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக் குழு (TVEC), தேசிய பயிற்சி மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA), தொழிற் பயிற்சி அதிகார சபை (VTA), சிலோன் ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் (CGTTI), தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் (DTET), தொழிற் கல்வி தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (UNIVOTEC), தொடர்புடைய தொழிற் சங்கங்கள் மற்றும் தேசிய ஓசோன் அலகு (National Ozone Unit) உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களுடன் தேவையான ஆலோசனை பெறுதல் மற்றும் கருத்து பரிமாறல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- தொழில்நுட்ப நிபுணர்கள் / தொழிலாளர்கள் சார்ந்த பிரதான கருப்பொருள் துறைகளை அடையாளம் காணுதல் (உதாரணம்: குளி'ரூட்டல் பதார்த்த (Refrigerants) கையாளுகை, கசிவுப் பரிசோதனை, மீட்பு (Recovery) செயல் முறைகள், பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் வலுச் சக்தி வினைத் திறன் மிக்க சேவைகள்).
- பாலின சமத்துவக் கோட்பாட்டை (Gender Mainstreaming) ஒருங்கிணைத்தல்.
- பங்குதாரர்களுடன் பணித் திடல் பயிற்சிப் பட்டறையையும், உறுதிப்படுத்தல் பணித் திடல் பயிற்சிப் பட்டறையொன்றையும் நடாத்துதல்.
- விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்கும், அவற்றை தேசிய பயிற்சி கட்டமைப்புகளில் ஒருங்கிணைப்பதற்கும் தேவையான பரிந்துரைகள் முன் வைத்தல்.
- தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கான பயனர் - நட்பு ரீதியான, படக் குறிப்புகளுடன் கூடிய வழிகாட்டியை உருவாக்குதல்.

**காலப் பகுதி**

இப் பணிகள் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட நாளிலிருந்து **3 மாத** காலப் பகுதியில் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

**மதியுறை தொடர்பாகத் தேவையான தகைமைகள்:**

- இயந்திரப் பொறியியல் துறையில் பட்டப் படிப்பு அல்லது குளிரூட்டி மற்றும் வளிப் பதனாக்கி தொழில்நுட்பத் துறையில் டிப்ளோமா அல்லது தொடர்புடைய தொழில்நுட்பத் துறை தகைமை.
- பட்டப் பின் படிப்புப் பட்டம் பெற்றிருத்தல் மேலதிக அனுகூலமாக கருதப்படும்
- குளிரூட்டிகள் மற்றும் வளிப் பதனாக்கி அமைப்புகள் (RAC) மற்றும் நடமாடும் வளிப் பதனாக்கி அமைப்புகள் (MAC) சார்ந்த சேவை வழங்குகை, பராமரிப்பு அல்லது தொழில்நுட்ப மேற்பார்வை பணிகளில் குறைந்தது 3 ஆண்டு கால தொழிற் சார் அனுபவம் பெற்றிருத்தல்
- தொழில்நுட்பவியலாளர்கள் / செயற்பாட்டாளர்களுக்கான பயிற்சிக் கருவிகள், தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள், கையேடுகள் அல்லது நிலையான செயற்பாட்டு நடைமுறை வழி வகைகள் போன்றவற்றை உருவாக்கியிருப்பதை நிரூபிக்கக் கூடியவாறான அனுபவம் பெற்றிருத்தல்
- TVET தொகுதிகள், NVQ சட்டக வடிவமைப்பு தொடர்பாக அறிவுத் திறன் பெற்றிருத்தல்
- பாலின முதன்மைபடுத்தல் தொடர்பான அறிவுத் திறன் மேலதிக நன்மையாக கருதப்படும்

- வலுவாதார மிக்க பகுப்பாய்வுத் திறன், திறமையான அறிக்கைத் தயாரிப்பு திறன், பயனுள்ள தொடர்பாடல் திறன் மற்றும் விரிவான வகையிலான பயிற்சி வழங்கும் திறன்களை பெற்றிருத்தல்
- சிக்கலான தொழில்நுட்ப உள்ளடக்கங்களை பயனாளர்களுக்கு நட்புள்ள ரீதியாகவும், விளக்கப் படங்களுடனும் கூட்டிணைந்த எளிமையான வழிகாட்டுதல்களாக மாற்றும் திறன் கொண்டிருத்தல்

**தெரிவு செய்யும் செயன் முறை:**

ஆலோசகர்களை தெரிவு செய்யும் செயன் முறையானது, ஆலோசகர்கர்களினது தராதர நிலை மற்றும் செலவின் அடிப்படையிலான தேர்வு (QCBS) செயன் முறையின் பிரகாரம், தேசிய பெறுகை முகவர் நிறுவனத்தின் (NPA) மூலம் வெளியிடப்பட்ட ஆலோசகர்களை தேர்ந்தெடுக்கும் அல்லது பணிகளில் ஈடுபடுத்தும் வழிகாட்டலுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும்.

**மேலதிக தகவல்கள்:**

ஆர்வமுள்ள ஆலோசகர்கள் தேவையான மேலதிக விபரங்கள் / விளக்கங்களை, 2026.05.25 ஆந் திகதி முதல் 2026.06.09 ஆந் திகதி வரையான வேலை நாட்களில் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.00 மணி வரையான காலப் பகுதியில், 0112034222 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அல்லது nousrilanka@nou.lk/techteam@nou.lk எனும் மின்னஞ்சல் முகவரிகளின் ஊடாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**விருப்பு வெளிப்படுத்துகையை (EOI) முன் வைத்தல்:**

ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட, முத்திரையிடப்பட்ட விருப்பு வெளிப்படுத்துகை (EOI) ஆவணத்தை, கீழே குறிப்பிடப்படுள்ள முகவரிக்கு 2026.06.09 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு முன்பு பதிவுத் தபாலில் அல்லது கைகளால் கொண்டு வந்து சமர்ப்பித்தல் வேண்டும். தொடர்புபட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆலோசகர்களை இணைத்துக் கொள்வதற்கான விருப்பு வெளிப்படுத்துகை (EOI)" என குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கின்ற விருப்பு வெளிப்படுத்துகை (EOI) ஆவணங்கள் நிராகரிக்கப்படும். விருப்பு வெளிப்படுத்துகைகள் 2026.06.09 ஆந் திகதி பி. ப 2.00 மணிக்கு திறக்கப்படும்.

**ஆவணங்களை பெற்றுக் கொள்ளுதல்:**

தொடர்புடைய வரையறை நியதிகள் (TOR) மற்றும் மாதிரிப் படிவத்தை (EOI) www.env.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணைய தளத்திலிருந்து அல்லது QR குறியீட்டின் மூலம் பதிவிறக்கம் செய்யலாம்.

**தலைவர் (CPCP),** தேசிய ஓசோன் பிரிவு, 7 ஆவது மாடி, சுற்றாடல் அமைச்சு, "சொபாதம் பியச", இலக்கம் 416/C/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்ல.

திகதி: 2026.05.24